1989 ஏப்ரல் 27]

(அ) விளவன்கோடு தொகுதியில் சில பகுதிகளில் ஏற்கெனவே கொடுக்கப்பட்ட குடும்ப அட்டைகளைத் திரும்பப்பெறுவதால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளவங்கோடு தொகுதியில் ஏறத்தாழ மீனவர் பகுதி மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதி ஏழை மக்கள், ஒரு வீட்டில் 2, 3 குடும்பங்கள் இருக்கின்றன. இதற்கு முந்தைய அரசு இருந்த காலத்தில், தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், வில்லேஜ் ஆபீசர் எல்லாம் நேரடியாகச் சென்று பார்த்துத்தான் ரேஷன் கார்டுகள், ஒரு வீட்டிற்கு 2, 3 கார்டுகளைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது புதிய ஆணை வந்திருக்கிறது என்று சொல்லி, ஒரு வீட்டிற்கு ஒரு கார்டு என்று சொல்கின்ற வகையில், ஏறத்தாழ என்னுடைய தாலுக்காவிலே 5,000 பேர்களுக்கு கார்டுகளை ரத்து செய்திருக்கிறார்கள். மேலும் இம்மாதிரி கார்டுகள் வேண்டுமென்று சொல்லி, 5,000 பேர்கள் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அந்த கார்டுகளும் கொடுக்கப்படவில்லை. மேலும் அரிசி வாங்கிக் கொண்டிருந்தவர்களுக்கு, அரிசி நிறுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, பழைய மாதிரி அரிசி கொடுப்பதற்கும், 5,000 பேர்களுக்கு கார்டுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சாதாரணமாக ஒரு வீட்டிலே 2, 3 ஏழைக் குடும்பங்கள் தங்குவது உண்மைதான். அவர்களுக்கு நேரடியாக தாசில்தார் வந்து பார்த்துத்தான் கார்டுகளைக் கொடுத்திருக்கிறார்கள். மேலும் இந்த மாதிரி இருக்கின்ற 5,000 கார்டுகளுக்கு உடனடியாக கார்டுகளை வழங்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் எழுப்பிய பிரச்சினையைப் பற்றி சில விளக்கங்களைத் தருவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டினுடைய மக்கட்தொகை 5 கோடியாக இருக்கிறது. ஆனால் ரேஷன் கார்டுகளில் இருக்கின்ற மக்கட்தொகை $6\frac{1}{4}$ கோடியாக இருக்கின்றது. எனவே இந்த $1\frac{1}{4}$ கோடி மக்களுக்கு நாம் அரிசி, சர்க்கரை போன்றவைகள் வழங்கியாக வேண்டும். எனவே இதைக் கண்டுபிடிக்கும்படி அரசாங்கம் இலாக்காவை கேட்டுக் கொண்டிருக்கிறது. அப்படி அவர்கள் போய் சோதனையிடுகின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போன்று ஒரு வீட்டில் இரண்டு குடும்பங்கள் இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டு குடும்பங்களுடைய எண்ணிக்கை இருக்கிறது. உதாரணத்திற்கு சுந்தரதாஸ் அவர்களுடைய குடும்பம் இருக்கிறது என்றால், அவர், அவருடைய,

[திரு. ஆற்காடு நா. வீராசாமி]

மனைவி, தாய், தந்தை, பிள்ளைகள் அதில் இருக்கிறார்கள் அவருடைய தம்பி வீட்டிலும், இவருடைய தாய், தந்தை இவருடைய பிள்ளைகளும் இருக்கிறார்கள். இப்படி எண்ணிக்கை இருக்கின்ற காரணத்தால் மக்கட்தொகை அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இது ஒன்று.

இரண்டாவது சிலபேர் இரண்டு திருமணங்கள் செய்து கொண்டு, இரண்டு குடும்பங்களை நடத்துகிறார்கள். அப்படி இரண்டு மனைவிமார்கள் வீட்டிலேயும் அந்தக் கார்டுகளிலே குடும்பத் தலைவருடைய பெயர் ஒரே பெயர் தான் பதிவாகி இருக்கிறது. அப்படி இருக்கக்கூடாது ஏதாவது ஒரு குடும்பத்திலேதான் குடும்பத் தலைவருடைய பெயர் இருக்கலாம் என்று சொல்லும் போது இரண்டு பேருமே என் வீட்டில் தான் அவர் பெயர் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். (சிரிப்பு) இலாகா இந்தப் பிரச்சினையிலே முடிவு எடுக்க முடியாத காரணத்தால் அந்தக் குடும்பத் தலைவர் எந்த வீட்டிலே அந்தப் பெயர் இருக்கலாம் என்று முடிவு எடுக்கிறாரோ அவருடைய முடிவிற்கு விட்டுவிடும்படி இலாகாவுக்கு சொல்லியிருக்கிறோம். எனவே இலாகா நல்ல முறையிலே குடும்ப அட்டைகள் வழங்குவதற்காக எடுக்கப்படுகிற இந்த நடவடிக்கைகளில் தயவுசெய்து யாரும் நோக்கம் கற்பிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சில குடும்பங்களுக்கு கார்டுகள் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அது அவருடைய தொகுதியிலே மட்டும் அல்ல, எல்லோருடைய தொகுதியிலேயும் இருக்கிறது. எனவே சமீபத்திலே நடைபெற்ற அந்த தேர்தல் வாக்காளர் பட்டியலையும் கையிலே வைத்துக் கொண்டு, குடும்ப அட்டைகள் வைத்துக் கொண்டிருக்கிற அவருடைய பட்டியலையும் வைத்துக் கொண்டு சோதனை இட்டு சரி பார்க்கும்படி இலாகாவைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இவைகளையெல்லாம் பரிசீலித்து 1990 ஆம் ஆண்டில் எந்த விதமான புகாரும் இல்லாத அளவுக்கு ரேஷன் கார்டுகள் புதுப்பித்துத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொன். விஜயராகவன் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லிக் கொண்டு வரும்போது சிலர் 2 மனைவிகளை வைத்திருக்கிறார்கள். 2 குடும்பங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றிச் சொன்னார்கள். அதை ஒரு வேளை அரசு ஏற்றுக் கொண்டது போல ஒரு தொனி இங்கே ஏற்பட்டது. இரண்டு கல்யாணம் செய்து, 2 மனைவிகளை வைத்துக் கொள்வது இந்திய சட்டப்படி குற்றமானது. ஆகவே அந்த இரண்டு மனைவிகள் வைத்திருப்பவர்களைப் பற்றி இங்கே சொல்கிறபோது ஏற்பட்ட தொனியை வைத்து அதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டது போன்ற நிலைமை ஏற்படுகிறது...

1989 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டில் பல சட்டங்கள் இருக்கின்றன. இந்துக்களுக்கு ஒரு சட்டம் இருக்கிறது. முஸ்லீம்களுக்கு என்று ஒரு சட்டம் இருக்கிறது. முஸ்லீம்கள் 5 குடும்பங்களைக் கூட வைத்துக் கொள்ளலாம் என்று. (குறுக்கீடு). 4 குடும்பங்களை வைத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. இந்தக் குடும்பங்களை எத்தனை வைத்துக் கொள்ளலாம் என்பதைப் பற்றி இப்போது உணவு இலாகா பரிசீலித்துக் கொண்டிருக்கவில்லை. ஆனால் எங்களுக்கு இருக்கிற கவலை எல்லாம் அந்த எண்ணிக்கையைப் பொறுத்துத்தான். இந்துக்களிலேயே கூட முதல் மனைவி ஒப்புதல் தருவார்களேயானால் இரண்டாவது திருமணம் செய்து கொள்ள எந்தவிதமான தடங்கலும் இல்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே அதிகமான " Point of Order " எல்லாம் வேண்டாம். ரொம்பப் பேருக்கு " Order " சரியாகத்தான் இருக்கிறது. (சிரிப்பு). திரு. உ. ரா. வரதராசன்

(ஆ) ஆந்திர மாநில சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சி குறித்து.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டப் பேரவையினுடைய உரிமை, அவைத் தலைவருடைய உரிமை சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினையை நான் இங்கே அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதிலே உச்ச நீதிமன்றம் சம்பந்தப்பட்டிருப்பதினாலே அதைப் பற்றி பேசுகிறபோது கடைப் பிடிக்கவேண்டிய எச்சரிக்கையோடு தான் நான் இந்தப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். ஆந்திர மாநில சட்டமன்றப் பேரவையிலே ஒரு நிகழ்ச்சி. அதனுடைய விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. அது சம்பந்தமாக பேரவை ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி அதை அமல்படுத்துகிறது. இந்தப் பிரச்சினை ஆந்திர மாநிலத்தினுடைய உயர்நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு....

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, உள்ளீடாக ஒரு கருத்தை வைத்துக் கொண்டு பேசும்போது, அந்தக் கருத்து எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். அந்தக் கருத்து இந்த அவையிலே உள்ளவர்களுக்கு எல்லாம் திட்டவட்டமாகத் தெரியாது. ஆகவே உள்ளீடாக ஒரு கருத்தை வைத்து அந்த அடிப்படையில் ஒரு கருத்தை இந்த அவையிலே எழுப்புவதற்கு தாங்கள் அனுமதிப்பது முறையல்ல என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உ. ரா. வரதராசன் அவர்கள் உட்கார வேண்டும். தாங்கள் எழுப்பிய சிக்கல் குறித்து